# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

## DEPOSITION OF WITNESS

OS.NO. - 100/2020
P.W.1 - வெங்கடேசன் த/பெ.முனிஐய்யநாயுடு
DATE - 11.04.2023.

வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

என்னுடைய கல்வி தகுதி என்னவென்றால் டிப்ளமோ இன் பார்மசி, பி.காம். ஆகும். ஆங்கிலம் படிக்க தெரியுமா என்றால் தமிழ் வழியில் படித்ததால் ஆங்கிலத்தை சரியாக புரிந்து கொள்ள இயலாது. வா.சா.ஆ.10 ஆவணமான வருமான வரி கணக்கில் பிரதிவாதிக்கு நான் கடன் கொடுத்த விவரத்தை குறிப்பிட்டுள்ளதாக கூறியுள்ளது குறித்து மேற்சொன்ன விவரத்தை என்னுடைய வழக்கறிஞர் அறிவிப்பிலும், தாவாவிலும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரி தான். இந்த வழக்கை நான் 2020ம் ஆண்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரி தான். வா.சா.ஆ.10 ஆவணம் 31.03.2021 தேதியிட்டது என்றால் சரி தான். எனவே அந்த ஆவணம் வழக்கிற்கு பின்னிட்ட ஆவணம் என்றால் சரி தான். பிரதிவாதி தான் முதன் முதலில் எனக்கு சட்ட அறிவிப்பு வா.சா.ஆ.6 மூலம் அனுப்பினார் என்றால் சரி தான். அந்த அறிவிப்பிற்கு நான் என்னுடைய வழக்கறிஞர் மூலம் 04.05.2020 தேதியில் பதில் அனுப்பினேன் என்றால் சரி தான். அந்த பதில் அறிவிப்பில் பத்தி 9ல் கடந்த 08.01.2020 தேதி அன்று செஞ்சி கிராமத்தை சேர்ந்த பஞ்சாயத்தார்கள் முன்னிலையில் தாவா புரோநோட்டுகளுக்கு உண்டான கடனை பிரதிவாதி 31.01.2020 தேதிக்குள் திருப்பி செலுத்துவதாக ஒப்புக்கொண்டு எழுத்து மூலமான ஆவணம் எழுதி கொடுத்ததாக சொல்லி உள்ளேன் என்றால் எனக்கு ஞாபகத்தில் இல்லை. அந்த பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ளது போல் எந்த பஞ்சாயத்தும் நடக்கவில்லை என்றாலும் பிரதிவாதி எந்த ஆவணமும் எழுதி

கொடுக்கவில்லை என்றால் எனக்கு ஞாபகத்தில் இல்லை. பஞ்சாயத்து யார்யார் முன்னிலையில் நடந்தது என்றும் அந்த பதில் அறிவிப்பில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகத்தில் இல்லை. பதில் அறிவிப்பை அனுப்ப விவரங்கள் நான் சொன்ன விவரங்களின் அடிப்படையில் தான் அனுப்பட்டது என்றால் சரி தான். என்னுடைய பதில் அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள விவரங்களை என்னுடைய வழக்கறிஞர் படித்து காண்பித்து அதனை நான் புரிந்து கொண்ட பின்னர் தான் பிரதிவாதிக்கு அனுப்பினேன் என்றால் சரி தான். என்னுடைய பதில் அறிவிப்பில் குறிப்பிட்டிருந்த பஞ்சாயத்து குறித்த விவரங்களை என்னுடைய பிராதில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனக்கு  ஞாபகத்தில் இல்லை. மேற்சொன்ன பஞ்சாயத்து குறித்து என்னுடைய முதல் விசாரணைக்கான பிரமாண வாக்குமூலத்தில் குறிப்பீட்டு சொல்லி உள்ளேனா என்றால் இல்லை. இதில் இருந்தே நான் வழக்கிற்காக பொய் சொல்பவர் என்று தெரிய வருகிறது என்றாலும் பதில் அறிவிப்பில் குறிப்பிட்டிருந்த விவரங்களை மறைத்து தாவா தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்வது போல் 08.01.2020 தேதியில் பஞ்சயாத்து நடைபெற்று இருந்தாலும் அதில் பிரதிவாதி 31.01.2020க்குள் தாவா புரோநோட்டுக்குண்டான கடனை திருப்பி செலுத்துவதாக எழுத்து மூலமாக ஒப்பு கொண்டு இருக்கும் பட்சத்தில் 31.01.2020க்கு பிறகு நான் உடனடியாக சட்ட நடிவடிக்கை எடுத்திருப்பேன் என்றாலும் அவ்வாறு நடவடிக்கை எடுக்காததால் நான் சொன்னது போல் எந்த பஞ்சாயத்தும் நடக்கவில்லை என்றாலும் நான் சட்ட நடவடிக்ககை எடுக்க முற்படுவது தெரிந்து பிரதிவாதி சட்ட அறிவிப்பு அனுப்பியதாக நான் சொல்வது பொய் என்றாலும் எனக்கு ஞாபகம் இல்லை. நான் பதில் அறிவிப்பு அனுப்பிய பிறகு பிரதிவாதி ஒரு கூடுதல் அறவிப்பு அனுப்பினார் என்றால் சரி தான். அந்த கூடுதல் அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. நேரடியாக வழக்கு தாக்கல் செய்தேன். நான் அனுப்பிய பதில் அறிவிப்பில் பிரதிவாதிக்கு நான் 5 நோட்டுகள் முன்னிலையில் எந்த இடத்தில் கடன் கொடுத்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஞாபகம் இல்லை.  எந்த இடத்தில் கடன்  கொடுத்தேன் என்ற

விவரத்தை முதன் முதலில் தாவாவில் கூறியுள்ளேன் என்றாலும் பதில் அறிவிப்பில் கூறவில்லை என்றாலும் பதில் அறிவிப்பில் கூறியுள்ளேனா என்று ஞாபகம் இல்லை. என்னுடைய பிராதில் பத்தி 5ல் பலமுறை 5 புரோநோட்டுகள் முன்னிலையில் பெற்ற கடனை அசல் மற்றும் வட்டியுடன் திருப்பி செலுத்துமாறு சாட்சிகள் முன்னிலையில் கேட்டதாக கூறியுள்ளது போல் என்னுடைய பதில் அறிவிப்பில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் எனக்கு ஞாபகத்தில் இல்லை. என்னுடைய பிராதில் பத்தி 6ல் முதன் முதலில் சாட்சிகளின் முன்னிலையில் பிரதிவாதியிடம் கடனை திருப்பி செலுத்த கேட்டதாக கூறியுள்ளேன் என்றால் சரி தான். நான் சாட்சிகளின் முன்னிலையில் பிரதிவாதியிடம் கேட்டதாக கூறியுள்ளது குறித்து அந்த சாட்சிகளின் பெயர், விலாசம் குறித்த முழு விவரம் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் பெயர்களை சொல்லியுள்ளேன். வழக்கிற்காக பொய் சொல்கிறேன என்றாலும் பிராதில் எந்த இடத்திலும் சாட்சிகளின் பெயர்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. எனக்கு பணம் லேவாதேவி தான் தொழில் என்றால் இல்லை விவசாயம் தான். எத்தனை நபர்களிடம் நான் பணம் கொடுத்து திருப்பி செலுத்த கோரி எத்தனை வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன் என்றால் 2-3 வழக்குகள் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கு தான் எனக்கு முதல் வழக்கா என்றால் இல்லை. எனக்கு நீதிமன்ற விவகாரங்கள் தெரியும் என்றால் சரியல்ல. பிரதிவாதி பெயரில் அசையா சொத்துகள் இருப்பதாக கூறியுள்ளது குறித்து ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் ஞாபகத்தில் இல்லை. தற்போது என்னிடம் காட்டபடும் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் பிரதிவாதி பெயரில் எந்த ஆவணமாவது உள்ளதா என்றால் இல்லை. நானும் பிரதிவாதியும் பக்கத்து பக்கத்து ஊரை சேர்ந்தவர்ள் என்றால் ஒரே பஞ்சாயத்தை சேர்ந்த பக்கத்து பக்கத்து ஊர். பிரதிவாதியை எனக்கு 10-15 வருடங்களாக பழக்கம் என்றால் வழக்கில் உள்ள முதல் புரோநோட்டை கொடுப்பதற்கு சுமார் 5வருடங்களுக்கு முன்னர் இருந்தே பழக்கம். தாவாவில் பிரதிவாதி என்ன தொழில் செய்கிறார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொல்லி உள்ளேன். பிரதிவாதி

என்னிடம் முதன் முதலில் மார்ச் 2013ல் ரூ.30,000/- கடனாக பெற்றார் என்றாலும் அவ்வாறு கடன் பெறும்போது 3 வெற்று காசோலைகளில் கையொப்பங்களும், பச்சை மற்றும் வெள்ளை வெற்று தாள்களில் கையொப்பமும், பிரதிவாதியிடம் பெற்றேன் என்றால் சரியல்ல. அந்த கடனை பிரதிவாதி நவம்பர் 2013ல் திருப்பி செலுத்திவிட்டார் என்றாலும் அதன் பின்னிட்டு பிரதிவாதி கையொப்பம் போட்டு கொடுத்த வெற்று காசோலைகள் மற்றும் பச்சை மற்றும் வெள்ளை வெற்று தாள்களை கையொப்பம் போட்டு கொடுத்த  பேப்பர்களை திருப்பி கேட்டதற்கு நான் கைதவறுதலாக வைத்து விட்டேன் என்றும் பின்னர் அதனை தேடி தருவதாக சொன்னேன் என்றாலும் சரியல்ல. பின்னர் ஜனவரி 2014ல் ரூ.50,000/-கடனாக பெற்றார் என்றாலும், அவ்வாறு கடன் பெறும்போது 3 வெற்று காசோலைகளில் கையொபப்ங்களும், பச்சை மற்றும் வெள்ளை வெற்று தாள்களில் கையொப்பமும், பிரதிவாதியிடம் பெற்றேன் என்றால் சரியல்ல. அந்த கடனை பிரதிவாதி ஜூன் 2014ல் திருப்பி செலுத்தி விட்டார் என்றாலும், அதன் பின்னிட்டு பிரதிவாதி ஏந்கனவே கையொப்பம் போட்டு கொடுத்த வெற்று காசோலைகள் மற்றும் பச்சை மற்றும் வெள்ளை வெற்று தாள்களை கையொப்பம் போட்டு கொடுத்த பேப்பர்கள் மற்றும் ஜனவரி 2014ல் கொடுத்த வெற்று காசோலைகளள் மறறும் வெற்று தாள்களில் கையொப்பம் போட்டதை திருப்பி கேட்டதற்கு நான் கைதவறுதலாக வைத்து விட்டேன் என்றும் பின்னர் அதனை தேடி தருவதாக சொன்னேன் என்றாலும் சரியல்ல. பின்னர் பிப்ரவரி 2015ல் ரூ.50,000/- கடனாக பெற்று அந்த கடனை ஜூலை 2015ல் திருப்பி செலுத்திவிட்டார் என்றாலும் அவ்வாறு திருப்பி செலுத்தும் போது மேற்சொன்ன கடனுக்காக பெற்ற வெற்று காசோலைகள் மற்றும் வெற்று தாள்களில் கையொப்பம் போட்டதை திருப்பி கேட்டதற்கு  நான் கைதவறுதலாக வைத்து விட்டேன் என்றும் பின்னர் அதனை தேடி தருவதாக சொன்னேன் என்றாலும் சரியல்ல. பின்னர் ஜனவரி 2019ல் ரூ.50,000/- கடனாக பெற்று அந்த கடனை ஏப்ரல் 2019ல் திருப்பி செலுத்திவிட்டார் என்றாலும் அவ்வாறு திருப்பி செலுத்தும் போது மேற்சொன்ன கடனுக்காக பெற்ற வெற்று காசோலைகள் மற்றும் வெற்று தாள்களில் கையொப்பம்

போட்டதை திருப்பி கேட்டதற்கு நான் கைதவறுதலாக வைத்து விட்டேன் என்றும் பின்னர் அதனை தேடி தருவதாக சொன்னேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி வா.சா.ஆ.6 அறிபிப்பை எனக்கு அனுப்பவதற்கு 6 மாதங்களுக்கு முன்னர் பலமுறை பிரதிவாதி கொடுத்த 15 காசோலைகள் 15 புரோநோட்டுகள், பச்சை மற்றும் வெள்ளை தாளில் கையொப்பம் போட்ட பேப்பர்கள், மற்றும் ஒரு என்ஜேஎஸ் பேப்பர் ஆகியவற்றை திருப்பி கொடுக்குமாறு கேட்டதற்கு திருப்பி தருவதாக காலம் தாழத்தி வந்தேன் என்றாலும் சரியல்ல. 05.03.2020 தேதியில் பிரதிவாதி மேற்சொன்ன ஆவணங்களை திருப்பி கேட்டதற்கு மேலும் ரூ.2,00,000/- தொகை கொடுத்தால் தான் அந்த ஆவணங்களை திருப்பி கொடுப்பேன் என்றும் தவறும் பட்சத்தில் அந்த ஆவணங்களை தயார் செய்து வெவ்வேறு நபர்கள் மூலம் வெவ்வேறு நீதிமன்றங்களில் வழக்கு தொடுப்பேன் என்று என்னுடைய நண்பர் தேவராஜ் முனனிலையில் பிரதிவாதியை மிரட்டினேன் என்றாலும் அதனால் தான் பிரதிவாதி எனக்கு வழக்கறிஞர் மூலம் வா.சா.ஆ.6 அறிவிப்பை அனுப்பினார் என்றால் அது போன்ற சம்பவமே நடக்கவில்லை. வா.சா.ஆ.6 அறிவிப்பு எனக்கு அனுப்பிய தேதியில் என்னுடைய நண்பர் தேவராஜிற்கு சேர்த்து அனுப்பினார் என்றால் எனக்கு தெரியும். ஆனால் எனக்கும் தேவராஜிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை. தேவராஜ் என்னுடைய ஊரை சோந்தவர் என்றால் இல்லை. பக்கத்து ஊரை சேர்ந்தவர். ஆனால் ஊர் பெயர் தெரியாது. லோகநாதன் என்பவர் என்ன வேலை செய்கிறார் என்றால் எனக்கு தெரியாது. 5 புரோநோட்டுகளும் அச்சு அசல் போல் ஆரம்பிக்கபட்டதும் முடிக்கப்பட்டதும் ஒரே இடத்தில் ஒரே மாதிரி உள்ளது என்றால் சரி தான். பிரதிவாதி தாவா புரேநோட்டுகளை எழுதி கொடுத்தது உண்மையாக இருந்தால் பிரதிவாதி அனுப்பிய அறிவிப்பிற்கு உடனடியாக பதில் அறிவிப்பு அனுப்பியிருப்பேன் என்றாலும் அவ்வாறு இல்லை என்பதால் தான் தாவா புரோநோட்டுகளை தயார் செய்து விட்டு பதில் அறிவிப்பை காலதாமதமாக அனுப்பியுள்ளேன் என்றாலும் சரியல்ல. தாவா எ முதல் ஈ வரையிலான புரோநோட்டுகளுக்கு எந்தவித பிரதிபலனும் இல்லை என்றாலும் பிரதிவாதி அந்த

புரோநோட்டுகளில் உள்ள கடனை பெற்று கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதிக்கு வருமானம் இருப்பதாகவும், அசையா சொத்துகள் இருப்பதாகவும் அதன் அடிப்படையில் தான் தாவா புரோநோட்டுகள் அடிப்படையில் கடன் கொடுத்ததாக கூறியுள்ளது குறித்து அது சம்மந்தமான எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரி தான். அவருக்கு நிலம் இருப்பது தெரிந்து தான் பணம் கடனாக கொடுத்தேன். பிரதிவாதி பெயரில் எந்த விவசாய நிலமும், அசையா சொத்துகளும் இல்லை என்றாலும் விவசாயா அபிவிருத்திக்காக கடன் கொடுத்ததாக கூறியுள்ளது பொய் என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 முதல் 5 வரையிலான ஆவணங்கள் வழக்கிற்காக தயார்செய்து தாக்கல் செய்யப்பட்டுளன்ள ஆவணங்கள் என்றாலும் அந்த ஆவணங்கிள் படி பிரதிவாதி எந்த பணமும் திருப்பி செலுத்த கடமைபட்டவர் அல்ல என்பதால் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

P REVATHY Digitally signed by P REVATHY

Additional District Judge(FTC),

Vellore.